**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.1 , ஜெயங்கொண்டம்</u>**

அசல் வழக்கு எண்.24/2024

நாள்:18.09.2025

வா.சா. 1 – செந்தில்

**<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

2ம் வாதி இருதயநோயாளி ஆவார். 3ம் வாதி பழனியப்பன் மாவட்ட பதிவாளராக பணிபுரிவதால் அவர்களுக்கு நான் குடும்ப மேனஜராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து என்னுடைய தாத்தா ராசுக்கு சொந்தமானது. என் தாத்தா ராசு 1995ல் இறந்துவிட்டார். ராசுவின் இறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என் அப்பா பெயர் கிருஷ்ணமூர்த்தி. அவர் 13.03.2007–ல் இறந்துவிட்டார். என்னுடைய அப்பாவின் இறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 29.03.1978–ல் என்னுடைய தாத்தா ராசு மற்றும் அவரது சகோதரர் பொன்னுசாமி, சிங்காரு மகன் கணேசன் ஆகியோர்களுக்கிடையே பாகப்பிரிவினை செய்யப்பட்டு உடையார்பாளையம் சார்பதிவாளர் அலவலத்தில் பதிவு செய்யப்பட்டது. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் 3 அட்டவணையாக சொத்துக்கள் பிரிக்கப்பட்டுள்ளது. பாகப்பிரிவினை பத்திரத்தில் தாவா சொத்தான சர்வே எண்.100/8 என்ன சொத்தாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் மனைக்கட்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. தாவா சொத்து பாகப்பிரிவினைக்கு பிறகு என்னுடைய தாத்தா ராசு பெயரில் உள்ளது. தாவா சொத்து என் தாத்தா பெயரில் இருந்ததற்கான வருவாய்துறை ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதிக்கு எப்போது நான் வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பினேன் என்றால் கொரனா காலத்தில் அனுப்பினேன். அதன் வருடம், தேதி தெரியுமா என்றால் 2020–ல் அனுப்பினேன். வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதியடம் எப்போது பேசினோம் என்றால் 2018 ஆம் ஆண்டு 2 மற்றும் 3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியிடம் சமாதானம் பேசினார்கள். அன்று இரவு சமாதானம் பேசும்போது 1ம் பிரதிவாதி சமாதனமாக போய்விடலாம் என்றும் அதற்கான சன்மானம் பற்றி காலையில்

பேசிக்கொள்ளலாம் என்று சொன்னார். மறுநாள் காலையில் 1வது பிரதிவாதி தாவா சொத்து தனது தாத்தாவின் சொத்து என்றும் சொத்தை தர முடியாது என்று சொல்லிவிட்டார். என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் 1ம் பிரதிவாதி கொலை மிரட்டல் மற்றும் மான நஷ்டம் ஏற்பட்டதாக சொல்லவில்லை. 1ம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என்னுடைய தாத்தா ராசுவும், என்னுடைய தந்தை கிருஷ்ணமூர்த்தியும் சேர்ந்து 1ம் பிரதிவாதிக்கு 02.01.1990-ல் ஒரு கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்ததாக பதில் அறிவிப்பில் சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியும். ஆனால் அந்த கிரையம் என்பது தவறு. தாவா சொத்தில் தற்போது யார் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் 1ம் பிரதிவாதி ராமு அனுபவம் செய்கிறார். தாவா சொத்தில் தொகுப்பு வீடு உள்ளது என்றால் இல்லை. 1990 கிரையத்திற்கு பிறகு தாவா சொத்தில் ராமு வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றாலும் 1ம் பிரதிவாதிக்கு எதிராக வேண்டும் என்றே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டு அனுபவித்து வருகிறார் என்றாலும் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகளை அலைக் கழிக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.1,
ஜெயங்கொண்டம்.